# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம் - 06 | செயன்முறைத் தொழினுட்பத்திறன் | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ..................................................

### பகுதி I

1) வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக்கூடிய பழமரம் ஒன்று.
1. கரும்பு 2. அப்பிள் 3. வாழை 4. பனை

2) உக்கலடையாத மூடுபடை.
1. வைக்கோல் 2. தென்னோலை 3. வாழைஇலை 4. பொலித்தீன்

3) உயர்பாத்தி அமைக்கப் பயன்படும் சட்டகத்திற்குப் பொருத்தமான ஒரு பொருள்.
1. தென்னந்தும்பு 2. பனைஓலை 3. பொச்சுமட்டை 4. வாழைஇலை

4) பயிர் நண்பராகக் காணப்படும் ஒரு பிராணி.
1. மண்புழு 2. நத்தை 3. மயிர்க்கொட்டி 4. எலி

5) உயிரற்ற மூடுபடைக்கு உதாரணம்.
1. நிலக்கடலை 2. வைக்கோல் 3. உழுந்து 4. பயறு

6) உயர் பாத்தியில் பயிரிடுவதற்கு இடப் பொருத்தமான மண்வகை.
1. மணல்மண் 2. களிமண் 3. இருவாட்டிமண் 4. செம்பூரான்மண்

7) நேரடியாக பாத்திகளில் வித்துக்களாக நடக்கூடிய பயிர்.
1. வல்லாரை 2. வற்றாளை 3. பொன்னாங்கன்னி 4. பயற்றை

8) நாம் உண்ணும் உணவில் குறைவாக உண்ண வேண்டிய உணவுப் போசனை.
1. மாப்பொருள் 2. புரதம் 3. விற்றமின்கள் 4. கொழுப்பு

9) பயிர்களுக்கு ஏற்படும் நோய்களுக்குத் தெளிக்கக்கூடிய இயற்கை பீடை நாசினி.
1. புகையிலைச்சாறு 2. வேப்பம்சாறு 3. அல்லிப்பூசாறு 4. மேற்கூறிய யாவும்

10) பயிர்நோய்ப் பீடைகளைக் கட்டுப்படுத்தப் புகையூட்டுவதற்குப் பொருத்தமான பதார்த்தம்.
1. மரமுந்திரினை மேற்றோல் 2. வைக்கோல்
3. பொச்சு மட்டை 4. தென்னை மட்டை

11) உணவுக் கூம்பகத்தின் உச்சியில் காணப்படும் உணவுக் கூட்டம்.
1. சோறு, பாண் 2. எண்ணெய், சீனி 3. மரக்கறி, பழம். 4. மீன், இறைச்சி

12) தயாரிக்கப்பட்ட உணவு வகை ஒன்று,
1. பிட்டு 2. இடியப்பம் 3. தோசை 4. ஜாம்

13) அரிசியைக் களஞ்சியப்படுத்தும் போது பாதிப்பை ஏற்படும் பூச்சி.
1. எறும்பு 2. நீள்மூஞ்சுவண்டு 3. கறையான் 4. நுளம்பு

kalyi.lk

14) தீட்டப்படாத சிவப்பரிசியில் காணப்படும் அதிக போசணைச் சக்தி.
1. விற்றமின் A   2. விற்றமின் B   3. விற்றமின் $B_1$   4. விற்றமின் $A_1$

15) புதிய மீனின் இயல்புகளில் ஒன்று.
1. பிரகாசமான கண்கள்.
2. விரலால் அழுத்தும் போது குழிவிழுதல்.
3. வாலில் பிடித்துத் தூக்கும் போது வளைதல்.
4. சிவப்பு நிறம் மங்கிய பூக்கள்

16) கருவாட்டை சமையலுக்காச் சேமித்து வைக்கப் பொருத்தமான முறை.
1. தகரப் பேணியில் மூடிவைத்தல்   2. புகைபடுமாறு தொங்கவிடல்.
3. கண்ணாடிப் போத்தலில் அடைத்தல்.   4. கடதாசியில் சுற்றி வைத்தல்.

17) தாவர புரத உணவு வகை.
1. இறைச்சி   2. மீன்   3. கருவாடு   4. பருப்பு

18) பாலுணவுகளில் ஒன்றாகக் கொள்ளப்படுவது,
1. சோறு   2. பாண்   3. பணிஸ்   4. யோகட்

19) ஆணிகளை அறைவதற்கும் ஆணிகளைக் கழற்றுவதற்கும் பயன்படும் ஆயுதம்.
1. உளி   2. தட்டுப்பொல்லு   3. குறடு   4. சுத்தியல்

20) வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கக்கூடிய மூலிகைப் பயிர் ஒன்று.
1. கற்றாளை   2. மிளகு   3. முடக்கொத்தான்   4. கீழ்காய் நெல்லி

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1) நீர் பாடசாலையில் செயன்முறைப்பாடத்தில் செய்த கணிப்பீடு ஒன்றைக் குறிப்பிடுக.
 2) நீர் செய்த கணிப்பீட்டிற்குப் பயன்படுத்திய கருவி உபகரணங்களைக் குறிப்பிடுக.
 3) இச்செயன்முறையினைச் செய்யும் போது உமக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் குறிப்பிடுக. (2+4+4=10 புள்ளிகள்)

02. 1) நாற்று மேடையில் வித்துக்களை இட்டு பின் நாற்றுக்களைப் பிடுங்கி தோட்டத்தில் நடும் பயிர்கள் 3 தருக.
 2) வீட்டுத் தோட்டத்தில் பயிர் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் 3 குறிப்பிடுக.
 3) வீட்டில் அழகுக்காகப் பயிரிடும் அலங்காரத் தாவரங்கள் 4 குறிப்பிடுக.
(3+3+4=10 புள்ளிகள்)

03. 1) உணவுப் பொருட்களை வாங்கும் போது அதில் உள்ள சுட்டுத்துண்டில் காணப்படும் விடயங்கள் 3 எழுதுக.
 2) புதிய உணவுகளின் தரப்பண்புகள் 3 குறிப்பிடுக?
 3) உணவுக் கூம்பகத்தின் படம் வரைந்து அதில் உரிய இடத்தில் பொருத்தமான உணவு வகையைக் குறித்துக் காட்டுக? (3+3+4=10 புள்ளிகள்)

04. 1) நாம் உண்ணும் உணவு உடலில் ஆற்றும் சேவைகள் 3 குறிப்பிடுக.
 2) சந்தையில் உணவுகளைக் களஞ்சியப்படுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 3 குறிப்பிடுக.
 3) தயாரிக்கப்பட்ட உணவுகளின் மூலம் கிடைக்கும் நன்மைகள் 4 குறிப்பிடுக.
(3+3+4=10 புள்ளிகள்)

05. 1) மரத்தாலான மேசை ஒன்று தயாரிக்கும் போது மேற்கொள்ளும் தொழினுட்பச் செயற்பாடுகள் 4 குறிப்பிடுக.
 2) தூண்டாக்கல் அல்லது வேறாக்கலுக்குப் பயன்படுத்தும் கருவி வகைகள் இரண்டு குறிப்பிடுக.
 3) வேலைசெய்யும் நபரின் பாதுகாப்பு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் 2 குறிப்பிடுக. (3+3+4=10 புள்ளிகள்)


kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page